මැතිවරණ කොමිෂන් සභාව
தேர்தல் ஆணைக்குழு
Election Commission
මැතිවරණ මහලේකම් කාර්යාලය, නො.02 සරණ මාවත, රාජගිරිය, ශ්‍රී ලංකාව
தேர்தல்கள் செயலகம், இல 02 சரண மாவத்தை, இராஜகிரிய, இலங்கை
Elections Secretariat, No.02 Sarana Mawatha, Rajagiriya, Sri Lanka

මාධ්‍ය නිවේදනය
ஊடக அறிவித்தல்
MEDIA RELEASE

**ஊடக அறிவித்தல் இல: LAE/2025/80** **2025.04.30**

# உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல் - 2025.05.06

## அனுமதியளிக்கப்பட்ட அறிவித்தல் கொடுக்கப்பட்ட தேர்தல் அலுவலகங்களை நடத்திச் செல்லல்

சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலொன்று நடைபெறுவதை உறுதிசெய்வதற்காக அறிவித்தல் கொடுக்கப்பட்ட தேர்தல் அலுவலகங்கள் சம்பந்தமாக பின்வரும் விடயங்களோடு ஒத்திசைவதன் மூலம் உதவுமாறு அனைத்து வேட்பாளர்கள், வாக்கெடுப்பு முகவர்கள், அதிகாரமளிக்கப்பட்ட முகவர்கள், பெரும்பாக முகவர்கள் மற்றும் அவர்களின் ஆதரவாளர்களிடம் தயவுடன் வேண்டிக் கொள்ளப்படுகிறது.

**அறிவித்தல் கொடுக்கப்பட்ட அலுவலகங்களை நடத்திச்செல்லல்**

| அலுவலக வகை | அலுவலகங்களை நடத்திச் செல்லக்கூடிய காலப்பகுதி | நடத்திச்செல்வதற்கான நிபந்தனைகள் |
|---|---|---|
| 01. உள்ளூர் அதிகார சபை வாரியாக நிறுவப்பட்டுள்ள அறிவித்தல் கொடுக்கப்பட்ட மைய அலுவலகங்கள் | 2025.03.03 ஆம் திகதி முதல் 2025.05.07 ஆம் திகதி வரை | 60 சதுர அடி பரப்பளவுள்ள அறிவித்தல் பலகை தவிர ஏனைய அனைத்து சோடனைகளும் 2025.05.03 ஆம் திகதி நள்ளிரவு 12.00 மணியாகும்போது அகற்றப்பட வேண்டும். |
| 02. ஒவ்வொரு வட்டாரத்துக்கும் நிறுவப்பட்டுள்ள அறிவித்தல் கொடுக்கப்பட்ட வட்டார அலுவலகங்கள் | | |

**சமன் ஸ்ரீ ரத்நாயக்க**
தேர்தல்கள் ஆணையாளர் நாயகம்